## தொகுதிகள் மறு சீரமைப்பு குறித்து ஆலோசனை!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தெலுங்கானா முதல்வருக்கு அழைப்பு!

## டெல்லியில் – அமைச்சர் கே.என்.நேரு தலைமையிலான குழுவினர் நேரில் சந்தித்து வழங்கினர்!



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பில் தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்களுக்கு அமைச்சர் கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி ஆகியோர் நினைவுப் பரிசு வழங்கினர்.



முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கடந்த 05.03.2025 அன்று தலைமைச் செயலகத்தில் நாடாளுமன்ற தொகுதிகளின் மறுசீரமைப்பு குறித்து நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மேற்கொண்ட முடிவின்படி, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ ஆகியோர் நேற்று முன்தினம் (13.03.2025) ஐதராபாத்தில் உள்ள தெலுங்கானா பவனில் பி.ஆர்.எஸ். கட்சியின் செயல் தலைவர் கே.டி. ராமாராவ் அவர்களை சந்தித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கடிதத்தை ஒப்படைத்து, வருகின்ற மார்ச் 22–ஆம் தேதி சென்னையில் நடைபெறவுள்ள "நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை தொடர்பாக அமைக்கப்பட்ட கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர்.

## தொகுதி மறுசீரமைப்பு விவகாரம்: இந்தியாவின்

# எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்து ஓங்கிக் குரல் எழுப்புவார் தமிழ்நாடு முதல்வர்!

### டெல்லியில் தெலுங்கானா முதல்வரை சந்தித்தபின் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

**புதுடெல்லி, மார்ச் 15–**

**'தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் இந்தியாவின் எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்து ஓங்கிக் குரல் எழுப்புவார் முதல்வர் ஸ்டாலின்' என்று தெலங்கானா முதல்வரை சந்தித்தபின் கனிமொழி கருணாநிதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

மக்களவை மறு சீரமைப்பு குறித்தான மாநிலங்களின் கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டியை டெல்லியில் தமிழக அரசின் பிரதிநிதிகளாக அமைச்சர் நேரு, மாநிலங்களவை உறுப்பினர் என்.ஆர். இளங்கோ ஆகியோர் டெல்லியில் நேற்று முன்தினம் (மார்ச் 13 ஆம் தேதி) சந்தித்து அழைப்பு விடுத்தனர். அதுபோது திமுகவின் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்பி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

சந்திப்பு முடிந்ததும் செய்தியாளர்களிடம் கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறியதாவது:

"டி லிமிட்டேஷன் என்பது இப்போது மிகவும் தீவிரமான, பற்றி எரியும் பிரச்சினையாக இருக்கிறது. மக்கள் தொகை அடிப்படையிலான மக்களவைத் தொகுதி மறு சீரமைப்பு என்பது மிகவும் ஆபத்தான ஒன்று. இது தென்னிந்தியா முழுமையும் கடுமையாக பாதிக்கும். தென்னிந்தியா மட்டுமல்ல, வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் பஞ்சாப் போன்ற மாநிலங்களையும் பாதிக்கும்.

**மாநில உரிமைகளுக்காக போராடக் கூடியவர் ரேவந்த் ரெட்டி!**

எங்கள் தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் இந்த விவகாரத்தை முன்னெடுத்திருக்கிறார். இதன் மூலம் இந்தியாவில் இருக்கிற அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒருங்கிணைத்து, ஒரே குரலாக ஓங்கி ஒலித்திட முன் வருமாறு அழைத்துள்ளார். அந்த வகையில் நாங்கள் இன்று தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி அவர்களை சந்தித்தோம். ரேவந்த் ரெட்டி மாநில உரிமைகளுக்கான போராட்டத்தில் எப்போதுமே தீவிரமாக இருப்பவர். டி லிமிட்டேஷன் போன்ற பிரச்சினைகளையும் எச்சரிக்கையோடு அணுகுவதாக எங்களிடம் தெரிவித்தார். அந்த வகையில் எங்களோடு இணைந்து, மாநில உரிமைகளை முன்னெடுத்துச் செல்வதில் தெலங்கானா முதல்வர் மிகவும் உறுதியான குரலாக இருப்பார்.

**கூட்டத்தில் பங்கேற்க ரேவந்த் ரெட்டி உறுதி!**

தமிழ்நாடு முதல்வரின் அழைப்பை அவரிடம் தெரிவித்தோம். தேசிய கட்சி என்பதால் தலைமையின் அனுமதி பெற்று நிச்சயமாக மார்ச் 22 ஆம் தேதி சென்னையில் நடைபெறும் கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தில் கலந்து கொள்வதாக உறுதியளித்தார்.

அந்த கூட்டத்தில் மக்களவைத் தொகுதிகள் மறு சீரமைப்பு குறித்து விவாதிப்போம். மாநிலங்களுடைய கருத்துகளைக் கேட்டு அதன்பின் மாநிலங்களின் ஒருமித்த குரலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த விவகாரத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வார். எங்களது உரிமைகளை பாதுகாக்க நாங்கள் தொடர்ந்து போராடுவோம்".

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டியளித்தார்.

## தொகுதிகள் மறு சீரமைப்பு ஆலோசனைக்கூட்டம்:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நிலைப்பாட்டிற்கு முழு ஆதரவு!

### அமைச்சர் கே.என்.நேரு தலைமையிலான குழுவினர் சந்திப்பிக்குப்பின்

## தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி பேட்டி!

**சென்னை மார்ச் 15–**

**மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற தொகுதிகளில் மறுவரையறை செய்யும்போது தென் மாநிலங்களுக்கு தொகுதிகள் குறையும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கருத்து தெரிவித்து வருகிறார்.**



தொகுதி மறுவரையறை குறித்து ஆலோசிக்க தென் மாநிலங்கள் கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டம் சென்னையில் வருகிற 22ஆம் தேதி நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் பிற மாநில கட்சிகளை நேரில் சென்று அழைப்பதற்காக அமைச்சர்கள் எம்.பி.க்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டிருந்தது.

இந்த குழுவினர் ஒவ்வொரு மாநிலமாக சென்று முதல் அமைச்சர் மற்றும் கட்சித் தலைவர்களை சந்தித்து 22ஆம் தேதி கூட்டத்தில் பங்கேற்குமாறு கடிதம் வழங்கி அழைப்பு விடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று முன்தினம் தெலுங்கானா முதல் அமைச்சர் (காங்கிரஸ்) ரேவந்த் ரெட்டியை டெல்லியில் கனிமொழி எம்.பி., அமைச்சர் கே.என்.நேரு, என்.ஆர்.இளங்கோ ஆகியோர் நேரில் சென்று கடிதம் வழங்கினார்கள்.

இந்தச் சந்திப்புக்கு பிறகு தெலுங்கானா முதல் அமைச்சர் ரேவந்த் ரெட்டி நிருபர்களிடம் கூறியதாவது

தொகுதி மறு சீரமைப்பு விவகாரத்தில் மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற தொகுதிகளை பிரிக்கும்போது தமிழ்நாடு மட்டுமின்றி தென் மாநிலங்களும் பாதிக்கப்படும் என்பது உண்மைதான். இது பற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இப்பிரச்சினைகளை பற்றி ஆலோசிக்க 22–ஆம் தேதி கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்தை கூட்டி உள்ளார்.

இந்த கூட்டத்தில் பங்கேற்குமாறு இன்று தி.மு.க. குழுவில் உள்ள என்னை நேரில் நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தனர்.

தொகுதி சீரமைப்பால் தென் மாநிலங்கள் பாதிக்கும் என்பதால் 22ஆம் தேதி நடைபெறும் கூட்டத்தில் நான் பங்கேற்பேன் முதலமைச்சரின் மு.க.ஸ்டாலின் நிலைப்பாட்டிற்கு நான் முழு ஆதரவு தெரிவிக்கிறேன்.

இது பற்றி கட்சி மேல் இடத்தில் கலந்து பேசி உரிய முடிவு காண்போம்.

இவ்வாறு ரேவந்த் ரெட்டி கூறினார்.

# பிரதம மந்திரி கிராம சாலை மேம்பாட்டு திட்ட வழிகாட்டுதல்களில் திருத்தம் செய்க!

### மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கோரிக்கை!

*புதுடெல்லி, மார்ச் 15 -*

*மார்ச் 12ஆம் தேதி நாடாளுமன்றத்தின் பூஜ்ஜிய நேரத்தில் பேசிய திமுக துணை பொதுச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்பி, பிரதம மந்திரி கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தில் முக்கிய திருத்தம் செய்ய வேண்டிய தேவையை சுட்டிக்காட்டினார்.*

*இதுகுறித்து மக்களவையில் அவர் பேசியதாவது: "பிரதம மந்திரி கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் தற்போதைய வழிகாட்டு நெறிமுறைகளின் படி, (PMGSY-III) இந்த திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் கிராம சாலைகள் 5 கிலோ மீட்டர் நீளத்துக்கு குறைவாக இருக்கக் கூடாது என விதிக்கப்பட்டிருக்கிறது.*

*ஆனால் தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் சாலை வசதி ஏற்கனவே பெருமளவு சிறப்பாக இருக்கும் நிலையில் 'last mile connectivity' எனப்படும் கடைசி துண்டு சாலைகள் இணைப்பே முக்கிய தேவையாக உள்ளது. அதாவது இரண்டு அல்லது ஒன்றரை கிலோ மீட்டர்களுக்கு உள்ளான சாலை அமைப்பதுதான் தேவையாக இருக்கிறது.*

*ஆனால் இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் இதை அனுமதிப்பதில்லை. தற்போது தனி-தனி கோரிக்கைகளின் அடிப்படையில் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு குறைவான சாலைகள் அனுமதிக்கபட்டுள்ளது. அதனால், தமிழ்நாட்டுக்கென 20 சாலைகள் மட்டுமே இதுவரை அமைச்சகத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளன.*

*ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிலைக் குழுவின் 36 ஆவது அறிக்கையிலே, கிராம சாலைகளுக்கான குறைந்தபட்ச அளவுகோலை 5 கிலோமீட்டர் என்பதிலிருந்து 2 கிலோமீட்டர் என்பதாக குறைக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு இந்த பரிந்துரையை இன்னும் ஏற்கவில்லை.*

*எனவே பிரதம மந்திரி கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலும் பயன்பெறும் வகையில் கிராம சாலைகளின் குறைந்தபட்ச நீளம் 1.5 கிலோ மீட்டர் என்பதாக நிர்ணயிக்க வேண்டும் என ஒன்றிய அரசை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தினார்.*



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் நேற்று முன்தினம் (13.03.2025) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் நடைபெற்ற தாலிக்கு தங்கம் வழங்கும் நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி 111 பயனாளிகளுக்கு ரூ.1.12 கோடி மதிப்பிலான தாலிக்கு தங்கம் மற்றும் நிதியுதவியும் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத்தலைவர் நித்தியா சுகுமார், காஞ்சிபுரம் ஒன்றிய குழுத்தலைவர் மலர்க்கொடி குமார், வாலாஜாபாத் ஒன்றியக் குழுத்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

## பாரத சாரணியர் இயக்கத்தின் வைர விழா!

# மிகப்பெரிய வெற்றி பெற வைத்தமைக்கு நன்றி!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு – பாரத சாரண சாரணியர் இயக்க தேசிய முதன்மை ஆணையர் கடிதம்!

*சென்னை, மார்ச் 15-*

*பாரத சாரணியர் இயக்கத்தின் வைர விழாவை மிகப்பெரிய வெற்றி பெற வைத்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு பாரத சாரண சாரணியர் இயக்க தேசிய முதன்மை ஆணையர் கே.கே.கண்டேல்வால் நன்றி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார்.*

*இது குறித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு அவர் எழுதியுள்ள கடிதம் வருமாறு:*



*பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி நிகழ்வை மிகப்பெரிய அளவில், மறக்கவியலாத வெற்றி பெறவைத்த தங்களது தலைசிறந்த தலைமைப் பண்புக்கும் அயராத அர்ப்பணிப்புக்கும் 63 இலட்சம் பாரத சாரண சாரணியர்களின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*28 ஜனவரி 2024 முதல் 3 பிப்ரவரி 2025 வரை திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்வு, அதில் கலந்துகொண்ட ஒவ்வொரு பங்கேற்பாளரின் நெஞ்சிலும் சிந்தையிலும் என்றென்றும் நினைத்து மகிழத்தக்கதாகப் பதிந்துவிட்டது. அதற்காகத் தங்களது தொலைநோக்கு மிகுந்த வழிநடத்தலுக்கு எனது நன்றிகள்.*

*தங்களது சீரிய தலைமையில், இந்தப் பெருந்திரளணி பாரத சாரண சாரணிய வரலாற்றில் ஒரு மைல்கல்லாக மட்டுமில்லாமல், அர்ப்பணிப்பு, கூர்ந்த திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைப்பு எவ்வாறு ஒரு கனவை நனவாக்க முடியும் என்பதற்கான ஒளிரும் எடுத்துக்காட்டாக மாறியுள்ளது. துல்லியமான ஏற்பாடுகள் மற்றும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள், எங்கள் இளம் பங்கேற்பாளர்களுக்கு இனிமையான மற்றும் பயனுள்ள அனுபவத்தை வழங்க உதவின.*

*இந்தப் பெருந்திரளணி நிகழ்வில் பாதுகாப்பு, காவல், நீர், சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதில் தங்கள் அர்ப்பணிப்பானது நிகழ்வின் ஒவ்வொரு நிலையிலும் வெளிப்பட்டது; இதில் பங்கேற்ற அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் சூழலை உருவாக்கியது. எவ்வளவு சிறியதானாலும், ஒவ்வொரு விஷயமும் மிகுந்த கவனத்துடனும் துல்லியத்துடனும் கவனித்துக் கொள்ளப்பட்டது.*

*இந்த அளவுக்கான கவனமும் திட்டமிடப்பட்ட அணுகுமுறையும், எங்கள் இளம் சாரண சாரணியர் நலனுக்கான தங்கள் ஆழமான அக்கறையையும், அவர்களுக்குச் மிகச் சிறந்த அனுபவத்தை வழங்குவதற்கான உங்கள் அர்ப்பணிப்பையும் காட்டுகிறது.*

*தங்கள் தலைமையில் நடைபெற்ற வைர விழா பெருந்திரளணி எதிர்கால நிகழ்வுகளுக்கு புதிய அளவுகோல்களை நிர்ணயித்தது மட்டுமில்லாமல், வரவிருக்கும் ஆண்டுகளில் இன்னும் பெரிய சாதனைகளை எட்டுவதற்கான அடிப்படையாகவும் அமைந்துள்ளது. இந்த நிகழ்வு சாரண இயக்கத்தினரை மேலும் நெருக்கமாக இணைத்துள்ளது; இது எதிர்காலத் தலைமுறையினரை உயர்ந்த இலக்குகளை நோக்கி முன்னேறத் தூண்டும் என்று உறுதியாக நம்புகிறோம்.*

*மீண்டும் ஒரு முறை தங்களுக்கும், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த தங்களது அர்ப்பணிப்பு மிகுந்த குழுவினருக்கும், தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்த பாரத சாரண சாரணிய இயக்கத் தன்னார்வலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த நிகழ்வின் வெற்றிக்குத் தங்களது கூட்டு முயற்சி, அர்ப்பணிப்பு, ஆர்வம் ஆகியவைதான் மிக முக்கியக் காரணிகளாக அமைந்தன. தங்களது விலை மதிக்க முடியாத பங்களிப்புகளுக்கு நான் மிகுந்த நன்றிக்கடன் பட்டுள்ளோம்.*

*இவ்வாறு அவர் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.*